1978 மார்ச் 16]

நடுநிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள்.

*593 வினா—திரு. தீ. சு. நல்லதம்பி:
திரு. க. அரங்கசாமி: } மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடுநிலைப் பள்ளிகளிலும், தமிழை சிறந்த முறையில் போதிக்க தமிழாசிரியர்களை நியமிக்கக் கோரி ஆசிரியர் சங்கத்திடமிருந்து ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா? அவ்வாறு நியமிக்க ஏதேனும் திட்டமுள்ளதா?

(ஆ) அவசரநிலையின்போது தமிழகத்தைச் சேர்ந்த எத்தனை பள்ளி ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டனர்? அரசு ஆணைப்படி அவர்கள் மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்—(அ) ஆம். நடுநிலைப் பள்ளிகளில் 1977-78ம் ஆண்டில், தமிழ் ஆசிரியர்களை நியமிப்பதற்கென்று 200 முதல்நிலை தமிழ் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்த அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) ஏழு ஆசிரியர்கள் அவசரநிலையின்போது கைது செய்யப்பட்டார்கள். அனைவரும் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

திரு. தீ. சு. நல்லதம்பி: அந்த ஆசிரியர்கள் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டனரா? அவர்கள் காவலில் இருந்த காலத்திற்கு ஊதியம் கொடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றி விவரம் இல்லை.

திரு. க. அரங்கசாமி: மிசா காலங்களில் கைது செய்யப்பட்டு ஆறு மாத காலம், ஓராண்டுக் காலம் கல்லூரி ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் விடப்பட்டு மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்களா? அவர்களுடைய குடும்பங்களுக்கு உதவும் வாய்ப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பாதிக்கப்பட்ட ஏழு ஆசிரியர்கள் மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் என்று முதலிலேயே சொல்லியிருக்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: தமிழாசிரியர்கள் அவர்கள் பணியை ஆற்றிக்கொண்டே படிப்படியாக பி.டி. தேர்வு பெற்றவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். அவர்கள் பி.டி. தேர்வு பெற்ற காரணத்தால் அந்தத் தகுதியை அவர்களுக்கு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: முதல்நிலை தமிழாசிரியர்களாக இருப்பார்களானால் அப்போதே அவர்கள் அந்தத் தகுதியைப் பெற்று விடுகிறார்கள். பி.டி. தேர்வு பெற வேண்டுமென்ற நிலை இல்லை.

(முற்பகல் 9.30).

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவசரநிலை இருந்தபோது எந்தக் காரணத்தைக் கொண்டு ஆசிரியர்களை கைதுசெய்தார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நெருக்கடி காலத்தில் 7 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற விவரத்தைத் தான் தந்திருக்கிறார்கள், அந்தக் காரணங்களை இங்கே குறிப்பிடவில்லை. அவசரநிலை காலத்திலே எடுக்கப்பட்ட முடிவுகள் அவை.

திரு. எஸ். ஜே. இராமசாமி: 7 பேர்களை கைது செய்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அந்த 7 பேரும் சென்னையைச் சேர்ந்தவர்களா அல்லது வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களா? அதோடு அவர்கள் எதற்காக கைது செய்யப்பட்டார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கைது செய்யப்பட்டவர்கள் விவரம் வருமாறு:

திரு. கே. வி. வஜ்ரம், பி.டி. ஆசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, பர்கூர், தர்மபுரி மாவட்டம்.

திரு. எம். சுப்ரமணி, தலைமை ஆசிரியர், அரசினர் உயர் நிலைப் பள்ளி. மேசலசின்னம்பள்ளி, கிருஷ்ணகிரி தாலூகா, தர்மபுரி மாவட்டம்.

திரு. வி. ராஜூ, அரசினர் உயர்நிலைப் பள்ளி, ஹோசூர், தர்மபுரி மாவட்டம்.

திரு. எஸ். வேலுசாமி, உடற்பயிற்சி ஆசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, கே. இராமநாதபுரம், மதுரை மாவட்டம்.

திரு. பி. இருதயராஜ், முதல்நிலை தமிழாசிரியர், வெஸ்லி உயர்நிலைப் பள்ளி, ராயப்பேட்டை, சென்னை-14.

1978 மார்ச் 16]

திரு. கே. இராமரத்தினம், பட்டதாரி ஆசிரியர், வீரராகவா உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.

திரு. இராமசாமி, ஆசிரியர், அரிசன நலப் பள்ளி, உதய செங்கன்பட்டி, நெல்லை மாவட்டம்.

மேலே உள்ள ஆசிரியர்களில் முதல் ஐவரை நெருக்கடிநிலை நீங்கி விடுதலை செய்யப்பட்டவுடனேயே மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டுள்ளது. திரு. இராமரத்தினம் என்பவர் 28-11-1977 முதல் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

திரு. இராமசாமி விடுதலையான மறுதினமே 25-3-1977 அன்றே மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, உயர்தொடக்கப் பள்ளிகளிலே மாணவர்களுடைய எண்ணிக்கை யைக் கணக்கிலே கொள்ளாது, தமிழின் தரத்தை உயர்த்துவதற்காக தமிழ் பயிற்றுவிப்பதற்கு தமிழ் ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இருக்கின்ற நிதி ஆதாரங்களைப் பொறுத்து தமிழாசிரியர்களை நியமிக்கின்றபோது சில விதிமுறைகளை நாம் அனுசரித்து வருகிறோம்.

திரு. சு. உ. பாக்கூர் சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, புலவர் படிப்பைப் படித்துவிட்டு வேலையற்றிருக்கின்ற தமிழாசிரியர்களை உயர்தொடக்கப் பள்ளிகளிலே நியமிக்க அரசு முன்னுரிமை தருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நிதி ஆதாரங்களைப் பொறுத்து நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பட்டு வருகின்றன.

திரு. தாழை மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவசர காலத்தில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே பணிபுரிந்த தட்சிணா மூர்த்தி, சரவணமுத்து ஆகியோர் மிசாவில் கைதாகியிருந்தார்கள், அமைச்சர் அவர்கள் படித்த பட்டியலில் அந்தப் பெயர்களைச் சேர்க்கவில்லையே அதற்கு என்ன காரணம் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: புதிய தகவலைத் தந்திருக்கிறார்கள், அதுபற்றி விசாரிக்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, 200 தமிழாசிரியர்களை நியமிப்பதற்காக உத்திரவிடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி நியமிக்கப்படுகிற போது ஊராட்சி நடுநிலைப் பள்ளிகளிலேயும் அந்த 200 பேர்களில்

நியமிக்கப்பட இருக்கிருர்களா? இன்னென்று, அரசினுடைய நிதி ஆதாரங்களை எடுக்காமல், ஒன்றியங்களிலிருந்து சம்பளத்திற்காக நிதியை கொடுக்கக்கூடிய முறையிலே தமிழாசிரியர்களை நியமிக்க அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இத்தமிழாசிரியர் பதவிகளை தமிழாசிரியர்கள் இல்லாத 6 முதல் 8 வகுப்புகளில் 4 பிரிவுகள் அல்லது அதற்கு மேலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி, மாநகராட்சி மற்றும் அரசு நடுநிலைப் பள்ளிகள், உயர்தர ஆரம்பப்பள்ளிகள் முதலியனவற்றிற்கு தேவைக்கேற்றுற்போல் வழங்கவேண்டுமென்றும் அவ்வாறு பகிர்ந்து அளித்தபின் மீதமுள்ள பதவிகளை இதே நிலையிலுள்ள தனியார் பள்ளிகளுக்குக் கொடுக்கப்படல் வேண்டுமெனவும், இவ்வாறு இப்பதவிகள் வழங்கப்படும்பொழுது பி.டி. ஆசிரியர் ஊதிய விகிதத்தில் தலைமை ஆசிரியர் பதவி வகிக்கும் பள்ளிகளுக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டுமெனவும் அதற்குப் பின்னரே இடைநிலை பயிற்சிபெற்ற ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாகக் கொண்டுள்ள மற்ற பள்ளிகளுக்கு மீதமுள்ள இப்பதவிகளை வழங்கல் வேண்டுமென பள்ளிக் கல்வி இயக்குநர் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்குஅறிவுரை வழங்கியுள்ளார்.

ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் நிதியிலிருந்து சம்பளம் தரும் வாய்ப்பை ஆராய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். பள்ளிகளுக்குத் தரப்படும் மானிய அடிப்படை பற்றிய கேள்வியாக இருப்பதால் அதை நான் கவனத்தில் எடுத்துக் கொள்கிறேன்.

துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்

*594 வின—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா?

எல்லா துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் பணிப் படி (Duty Allowance) கொடுக்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இல்லை.

திரு. தி. அன்பழகன்: தலைவரவர்களே, துவக்கப் பள்ளிகளில் ஓராசிரியராகப் பணி புரிபவர்களுக்கும் பணிப்படி கொடுக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மூன்று ஆசிரியர்கள் மட்டுமே (தலைமை ஆசிரியர் உள்பட) பணியாற்றும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS